# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
*************

முறையீட்டு மனு எண்: 0935/2016
ஆணை எண்: 34/2017
நாள்: 24/03/2017

திரு. ப. அப்புசாமி,
ஊமா ரெட்டியூர்,
ஈரோடு மாவட்டம்–638 311. - முறையீட்டு மனுதாரர்

திரு. T.செந்தில்குமார்
பேரூராட்சி மன்ற முன்னாள் தலைவர்,
அம்மாப்பேட்டை பேரூராட்சி, ஈரோடு மாவட்டம். - எதிர் மனுதாரர்

ஈரோடு மாவட்டம், அந்தியூர் வட்டம், ஊமா ரெட்டியூர் கிராமத்தைச் சேர்ந்த ஆடிட்டர் திரு. ப. அப்புசாமி என்பவர், அம்மாபேட்டை பேரூராட்சி மன்றத் தலைவர் திரு. T. செந்தில் குமார் அவர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட 19/10/2015 நாளிட்ட புகார் மனு, பேரூராட்சிகளின் இயக்குநரின் கடிதம் ந.க.எண்.5048/2015/இ1, நாள்:6.9.2016 வாயிலாக, இம்முறைமன்ற நடுவம் மூலம் உரிய விசாரணை மற்றும் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு, அசலாக அனுப்பி வைக்கப்பட்டு, 08.09.2016 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டது. மேற்படி புகார் மனு 935/2016 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்யப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

ஈரோடு மாவட்டம், அந்தியூர் வட்டம், ஊமா ரெட்டியூர் கிராமத்தைச் சேர்ந்த ஆடிட்டர் திரு. ப. அப்புசாமி என்பவர் 19.10.2015 நாளிட்ட தனது மனுவில் அம்மாபேட்டை பேரூராட்சி மன்றத் தலைவர் திரு. T. செந்தில் குமார் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளை அங்கீகரிக்கப்படாத வீட்டுமனை உரிமையாளர்களிடம் லஞ்சமாக வீட்டு மனைகளை தனது பெயரிலும் தனது மனைவி பெயரிலும் கிரயம் பெற்றுக் கொண்டு வீட்டு மனைகள் விற்பனை செய்ய அனுமதித்துள்ளார் என்றும், தனது பெயரில் கணபதி நகர் என்ற அங்கீகரிக்கப்படாத வீட்டு மனையை விற்பனை செய்து வருகிறார் என்றும் இதனால் பேரூராட்சிக்கு நிதி இழப்பு ஏற்பட்டுள்ளதுடன் அடிப்படை வசதிகள் செய்து தருவதற்கான செலவும் பேரூராட்சிக்கு ஏற்படுகிறது என்றும் தெரிவித்துள்ளார். மேலும், அங்கீகரிக்கப்படாத சாஸ்தா நகரில், பேரூராட்சி மன்றத் தலைவர் தன் மனைவி பெயரில் உள்ள வீடுகளுக்கு தனது அதிகாரத்தை முறைகேடாக பயன்படுத்தி அங்கீகாரம் பெற்றுள்ளார் எனவும் தெரிவித்துள்ளார்.

2. மேற்குறிப்பிட்ட முறையீடுகள் குறித்து முறையீட்டு மனுதாரரிடம் விசாரணை மேற்கொள்ள இம்முறைமன்ற நடுவ அழைப்பாணை அ.ம.எண்.935/2016/பேரூராட்சி, நாள்: 8.9.2016 அனுப்பப்பட்டு, 20.9.2016 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அன்று நடைபெற்ற விசாரணையில் முறையீட்டு மனுதாரர் கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் அளித்தார்:-

"நான் கூட்டுறவு தணிக்கை துறையில் கூட்டுறவு தணிக்கை அலுவலராக 30 ஆண்டுகாலம் பணிபுரிந்து நாமக்கல் மாவட்டத்தில் கடைசியாக 31.03.2014 அன்று ஓய்வு பெற்றேன். தற்போது அம்மா பேட்டையில் வசித்து வருகிறேன். நான் முதன் முதலாக 23.02.2015 அன்று அம்மா பேட்டை பேரூராட்சி செயல் அலுவலருக்கு தலைவர் மீது புகார் மனு அனுப்பி, நகல் பேரூராட்சிகளின் இயக்குநருக்கு அனுப்பி இருந்தேன். அதன் பிறகு மாவட்ட ஆட்சியருக்கு 19.10.2015 அன்று ஒரு மனு அனுப்பினேன். பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் 30.08.2015 அன்று என்னை அழைத்து விசாரணை செய்தார். பின்பு 01.08.2016 அன்று பேரூராட்சிகளின் இயக்குநர் விசாரணை செய்தார். இது குறித்து சென்னை உயர்நீதிமன்றத்தில் டிசம்பர் 2015 ல் வழக்கு பதிவு செய்தேன். 4 மாதங்களில் நடவடிக்கை எடுக்குமாறு பேரூராட்சிகளின் இயக்குநருக்கு 17.12.2015 அன்று ஆணையிட்டார்கள். அதில் முதல் பிரதிவாதியாக பேரூராட்சிகளின் இயக்குநரும், இரண்டாவது பிரதிவாதியாக பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் மற்றும் மூன்றாவது பிரதிவாதியாக பேரூராட்சி தலைவர் (வழக்கு எண். 39754/2015) சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த நீதிமன்ற ஆணைவந்தபோது யாரும் எந்த விசாரணையும் செய்யவில்லை. அதன் பின்பு நீதிமன்ற அவமதிப்பு வழக்கு எண்.1689/2016ன்படி ஜூலை 2016ல் வழக்கு தொடர்ந்தேன். அதன் பின்பு 01.08.2016ல் என்னை பேரூராட்சிகளின் இயக்குநர் சென்னையில் உள்ள அவர் அலுவலகத்தில் விசாரித்தார். என்னிடம் வாக்குமூலமும் பெற்றார். அதன் பிறகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் இருந்து அழைப்பு வந்தது. நான் என்னுடைய புகார் மனுவில் தெரிவித்தபடி, தலைவரும், அவர் மனைவியும் அரசு விதிகளுக்கு முரணாக அங்கீகரிக்கப்படாத வீட்டுமனை உரிமையாளர்களிடம் வீட்டு மனைகளை லஞ்சமாக பெற்றுக்கொண்டு அங்கீகரிக்கப்படாத வீட்டு மனைகளை விற்பனை செய்ய உடந்தையாக இருந்துள்ளார். இதனால் பேரூராட்சிக்கு வரவேண்டிய காலி இட ஒதுக்கீடு (Reserve Site) மூலம் மட்டும் பேரூராட்சிக்கு ரூபாய் ஒரு கோடிக்குமேல் இழப்பு ஏற்பட்டுள்ளது. இதுதவிர அங்கீகார கட்டணம், அபிவிருத்தி கட்டணம் போன்ற இதர வருமானங்கள் மூலமும் இழப்பு ஏற்பட்டுள்ளது. நகராட்சிகள் சட்டம் 1920, விதி 353ன் படி மேற்படி இழப்புகளுக்கு பேரூராட்சி மன்றத்தலைவரே பொறுப்பாவார். மேலும், இவர் கணபதி நகர் என்ற பெயரில் அங்கீகரிக்கப்படாத வீட்டு மனைகளை விற்பனை செய்துவருகிறார். இதன்மூலமும் பேரூராட்சிக்கு பல லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. நகராட்சிகள் சட்டம் 1920, விதி 358ன்படி பேரூராட்சி மன்றத் தலைவரும் ஒரு பொது ஊழியர் ஆவர். அரசு நன்னடத்தை விதிகள் பேரூராட்சி மன்றத்தலைவருக்கும் பொருந்தும். அரசின் அனுமதியின்றி அங்கீகரிக்கப்படாத வீட்டுமனைகளை விற்பனை செய்வதன்மூலம் இந்த விதிகளின்படி தண்டிக்கப்பட வேண்டியவர் ஆவர். மேலும், அங்கீகரிக்கபடாத வீட்டு மனை விற்பனை செய்யும் உரிமையாளர்கள் அந்த வீட்டுமனைகளுக்கு சாலைவசதி, சாக்கடை வசதி, குடிநீர் வசதி, மின்சார வசதி போன்றவைகளை அவர்களது செலவிலேயே செய்து தரப்பட வேண்டும். ஆனால் பேரூராட்சி மன்றத் தலைவர் அங்கீகரிக்கப்படாத வீட்டுமனைகளை லஞ்சமாக பெற்றுக்கொண்டு விற்பனை செய்ய அனுமதித்ததின் மூலம் மேற்படி வீட்டுமனைகளுக்கு பேரூராட்சி பல லட்ச ரூபாய் செலவு செய்து இந்த வசதிகளை செய்துதர வேண்டிய நிலை உள்ளது. இதனால் பேரூராட்சிக்கு மேலும் பல லட்ச ரூபாய் இழப்பு ஏற்படும். இதை எவ்வளவு இழப்பு என கணக்கிட முடியவில்லை. அங்கீகரிக்கப்படாத நிலங்களை வியாபாரம் செய்பவர்களிடம் ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு நிலங்களை அவர் பெயரிலே கிரையம் செய்துள்ளார். அதற்கான ஆவண நகல்களை விசாரணையின் போது சமர்ப்பித்துள்ளேன்.

மேலும் எழுத்து பூர்வமான வாக்குமூலம் இதனுடன் சமர்ப்பித்துள்ளேன். ஏற்கனவே இவர் போலியான சாதி சான்று கொடுத்து கொண்டா ரெட்டி என தேர்தலில் நின்றார். இதனால் வழக்கு தொடரப்பட்டு மாநில விழிக்கண் குழு அவர் அளித்த சான்று போலி எனவும் கொண்டாரெட்டி இனத்தை சார்ந்தவர் இல்லை எனவும் முடிவு செய்தார்கள். மாநில விழிக்கண் குழுவின் இதுபோன்று பதவியில் இல்லாத ஒரு கோட்டாச்சியர் தலைவருடைய கையெழுத்து போட்டு மோசடி தெரிந்து அம்மாப்பேட்டை காவல் நிலையத்தில் வழக்கு எண்.252/2015ன்படி வழக்கு தொடரப்பட்டு பவானி குற்றவியல் நடுவர் மன்றத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது." என்றும் தெரிவித்தார்.

3. மேலும், தனது 20.9.2016 நாளிட்ட எழுத்துபூர்வ வாக்குமூலத்தில் முறையீட்டு மனுதாரர் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-

"பேரூராட்சி மன்றத் தலைவரின் இத்தகைய முறைகேட்டால் பேரூராட்சிக்கு கீழ்க்கண்டவாறு இழப்பு ஏற்பட்டுள்ளது. இந்த இழப்புக்கு நகராட்சிகளின் சட்டம் 1920, பிரிவு 353-ன்படி இவரே முழு பொறுப்புடையவர் ஆவார்.

| அங்கீகரிக்கப்படாத வீட்டுமனை விற்பனை செய்ய அனுமதித்ததின் பேரில் ஏற்பட்ட இழப்பு | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வ. எண். | வீட்டு மனையின் பெயர் | பரப்பு ஏக்கர் சென்ட் | 10% ரிசர்வ் சைட் சென்ட் | மொத்த சதுர அடி | அரசு வழிகாட்டி மதிப்பு சதுர அடி | மொத்த இழப்பு (ரூ) |
| 1. | பொன்னி நகர் | 3.19 | 32 | 13952 | 100 | 1395200 |
| 2. | உழவன் நகர் | 2.10 | 21 | 9156 | 300 | 2746800 |
| 3. | சன்னி கார்டன் | 1.50 | 15 | 6440 | 400 | 2616000 |
| 4. | காவேரி நகர் | 3.00 | 30 | 13080 | 300 | 3924000 |
| 5. | மூனாஞ்சாவடி | 0.62 | 6 | 2616 | 100 | 523200 |
| 6. | கணபதி நகர் | 3.45 | 34½ | 15042 | 100 | 1540200 |
| | | | | | மொத்த இழப்பு | 12745400 |

பேரூராட்சிக்கு ஒதுக்கப்பட வேண்டிய (Reserve Site) இடத்தின் மூலம் மட்டும் ரூ.1,27,45,400/- ஆகும். இது தவிர அங்கீகார கட்டணம், அபிவிருத்தி கட்டணம், காலியிட வரி மூலம் பல லட்சம் இழப்பை ஏற்படுத்தியுள்ளார்.

XXX XXX XXX XXX

நகராட்சிகளின் சட்டம் 1920, பிரிவு 358-ன்படி பேரூராட்சி தலைவரும் ஒரு பொதுப் பணியாளர் ஆவார். அதன்படி இவர் அரசின் முன் அனுமதி பெறாமல் தனது பெயரிலும், தனது மனைவி பெயரிலும், தனது பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் அங்கீகரிக்கப்படாத வீட்டுமனைகளை வாங்கியும், விற்பனையும் செய்து வருகிறார்.

இவர் முறைகேடாக அங்கீகரிக்கப்படாத வீட்டுமனைகளை வாங்கியும், முறைகேடாக அங்கீகரிக்கப்படாத வீட்டு மனைகளை விற்பனை செய்வதன் மூலம் அம்மாபேட்டை பேரூராட்சிக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் கோடிக்கணக்கான ரூபாய் இழப்பு ஏற்படுத்தியுள்ளார். ...............................

இழப்பு எனவே, தனது பதவியை முறைகேடாக பயன்படுத்தி பேரூராட்சிக்கு கடுமையான நடவடிக்கை ஏற்படுத்திய இவர் மீது இந்திய தண்டனை சட்டங்களின்படி எடுக்க எனது நேரடி விசாரணையில் எழுத்து பூர்வமாக கேட்டுக்கொள்கிறேன் " என்று தெரிவித்துள்ளார்.

4. மேற்படி முறையீட்டு மனுதாரரின் குற்றச்சாட்டுகள் குறித்து எதிர்மனுதாரரான பேரூராட்சி மன்றத் தலைவர் திரு. T. செந்தில் குமார் அவர்களிடம் விசாரணை மேற்கொள்ள, இம்முறைமன்ற அழைப்பாணை அ.ம.எண்.935/TPT/2016/ நாள்:08.09.2016 அனுப்பப்பட்டு 22.9.2016 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி விசாரணையில் எதிர்மனுதாரர் கீழ்கண்டவாறு வாக்குமூலம் அளித்தார்:-

"30.06.2015 அன்று ஈரோடு பேரூராட்சி உதவி இயக்குநர் அவர்கள் கடிதம் மூலம் நான் மனுதாரர் திரு.அப்புசாமி அவர்களின் புகார் மனு குறித்து விசாரணைக்கு அழைக்கப்பட்டேன். அந்தப் புகார் மனு மீது விளக்கம் அளிக்க 15 நாட்கள் கால அவகாசம் கேட்டேன். ஆனால் நான் பதில் அளிக்கவில்லை. இதற்கிடையில் மனுதாரர் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்த விவரம் எதுவும் எனக்கு தெரியாது. 25.07.2016 அன்று பேரூராட்சிகளின் இயக்குநரிடமிருந்து 01.08.2016 அன்று நேரில் ஆஜராகுமாறு ஒரு கடிதம் வந்தது. அதன்படி 01.08.2016 அன்று பேரூராட்சிகளின் இயக்குநர் முன்பு ஆஜராகி மனுதாரரின் புகார் குறித்து பதில் அளிக்க ஒருவாரம் அவகாசம் கேட்டேன். அதன்படி 08.08.2016 அன்று நேரில் ஆஜராகி எழுத்து மூலமாக எனது விளக்கத்தை அளித்தேன். அதன் நகல் இம்முறைமன்ற நடுவத்தின் முன் சமர்ப்பிக்கிறேன். நான் 30 வருடமாக அரிசி நெல் வியாபாரம் செய்து வருகிறேன். அதில் வந்த வருமானத்தை வைத்தே எனது பெயரில் 3 வீட்டு மனைகள் (1200 சதுர அடி, 1800 சதுர அடி, 5000 சதுர அடி) மற்றும் மனைவி பெயரில் 2 வீட்டு மனைகள்( 1200 சதுர அடி, 1500 சதுர அடி) கிரையம் பெற்றுள்ளோம். நானோ என் மனைவியோ வீட்டு மனை உரிமையாளர்களிடம் வீட்டு மனைகளை லஞ்சமாக பெறவில்லை. அந்த வருமானத்திற்குரிய வருமானவரி கட்டிய இரசீதின் நகல் இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். அதில் உழவன் நகர், பொன்னி நகர், சன் வீ கார்டன் ஆகிய லேஅவுட்கள் மட்டும் அங்கீகரிக்கப்படவில்லை, வெங்கட்டம்மாள் நகர் லேஅவுட் மட்டும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்த லேஅவுட் எல்லாம் நான் தலைவர் ஆவதற்கு முன்பே போடப்பட்டது. நான் தலைவர் ஆனதற்கு பின்பு தான் வாங்கினேன். அங்கீகரிக்கப்படாத வீட்டு மனைகளை வாங்கக் கூடாது என்பது எனக்கு தெரியாது. எனது வியாபாரத்தின் மூலம் வந்த வருமானத்தை வைத்தே நான் மனைகளை வாங்கினேன். வெங்கட்டம்மாள் நகர், செந்தூர் நகர் சேலம் டவுன் பிளானிங் உதவி இயக்குநர் ஒப்புதல் பெற்று அதை பேரூராட்சி மன்றத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டு தற்போது விற்பனை ஆகின்றது. அந்த லேஅவுட் உரிமையாளர் நான் இல்லை. அங்கீகரிக்கப்படாத வீட்டு மனைகளுக்கு குடிநீர் வசதி, சாலைவசதி போன்றவற்றை பேரூராட்சி சார்பாக செய்து தரவில்லை. நானும் அப்புசாமியும் சிறுவயது முதல் நண்பர்கள். அம்மாப்பேட்டை பேரூராட்சிக்குட்பட்ட ஊமாரெட்டியூர் அரசு நடுநிலைப்பள்ளி 2011–ஆம் ஆண்டு உயர்நிலை பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டது. பள்ளிகூடத்திற்கு போதிய இடம் இல்லாததால் ஊர் பொதுமக்கள் மூலமாகவும் முன்னாள் பள்ளி மாணவர்கள் மூலமாகவும் நானும் அப்புசாமியும் முன்னின்று ரூ.15லட்சம் வசூல் செய்து, அப்புசாமியின் மனைவி திருமதி. தங்கம் பெயரில் இருக்கும் 4 ஏக்கர் நிலத்தில் உள்ள 60 சென்ட் இடத்தை பள்ளிக்கூடம் கட்டுவதற்கு தேர்வு செய்தோம். ஊமாரெட்டியூர் முதல் குருரெட்டியூர் செல்லும் பிரதான சாலையில் இருந்து வடக்கே உள்ள இந்து அறநிலையத்துறைக்கு சொந்தமான பூமியைத் தாண்டிதான்

பள்ளிக்கூடத்திற்கு வாங்குவதாக இருந்த இடத்திற்கு செல்ல வேண்டும். இதன் காரணமாக இந்து அறநிலையத் துறைக்கு மனு கொடுத்தோம். இந்து அறநிலையத் துறை இணை ஆணையாளர் திருநடராஜன் அவர்கள் நேரில் ஆய்வு செய்து கோவில் பூமியை பிளவு செய்து தடம் கொடுக்கமுடியாது என்று திட்டவட்டமாக கூறிவிட்டார். அதன்பின் சுந்தராம்பாளையத்தில் 60 செண்ட் இடத்தை தேர்வு செய்து விலைக்கு வாங்கினோம். தமிழக அரசு புதிய பள்ளிக்கூடம் கட்டுவதற்கு 1 கோடியே 75 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கி தற்போது பணி நடந்து வருகிறது. திரு.அய்யசாமி அவர்களிடம் பள்ளிக்காக வசூல் செய்த ரூ. 6 லட்சத்தை திருப்பி கேட்டதற்கு தரமுடியாது எனக் கூறிவிட்டார். அதன்பின் அம்மாப்பேட்டை காவல் நிலையத்தில் புகார் செய்து காவல் நிலைய ஆய்வாளர் பணத்தை பெற்றுக் கொடுத்தார், இதனால் என்மீது கோபம் கொண்டு காழ்ப்புணர்ச்சி கொண்டு இது போன்ற புகார் மனுவினை அனுப்புகிறார்" என்று தெரிவித்தார்.

5. மேற்படி முறையீட்டு மனு தொடர்பான தல ஆய்வு அறிக்கை மற்றும் உரிய ஆவணங்களுடனும் வருகை தந்து விளக்கம் அளிக்க ஈரோடு மாவட்ட பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களுக்கு இம்முறைமன்ற அழைப்பாணை அசல் மனு எண்.935/TPT/2016/ நாள்: 08.09.2016 அனுப்பப்பட்டு, ஈரோடு மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களிடம் 26.09.2016 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது. விசாரணையின் போது தனது எழுத்துப் பூர்வமான 23.09.2016 நாளிட்ட கடிதத்தினை வாக்குமூலமாக சமர்ப்பித்துள்ளார். மேற்படி எழுத்துப்பூர்வ வாக்குமூலத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-

"மனுதாரர் 23.02.2015-ந் தேதி அம்மாபேட்டை பேரூராட்சி செயல் அலுவலருக்கு அனுப்பப்பட்ட புகார் மனுவை 16.02.2015 அன்று மாவட்ட ஆட்சியர் அவர்களின் குறைதீர்க்கும் நாள் கூட்டத்திலும் அளித்திருந்தார். அதில், அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவு சிங்கம்பேட்டைகாரர் பூமியில் 2 ஏக்கர் 40 செண்ட் நிலத்தினை கணபதிநகர் என்ற பெயரில் முறைகேடாக மனைகளை விற்பனை செய்து வருவதாகவும், தனது மனைவி பெயரில் பொன்னிநகர், உழவன் நகர், வெங்கட்டம்மாள் நகர் ஆகிய இடங்களிலும் ஸ்ரீசன்வி கார்டன், மூணாஞ்சாவடி ஆகிய இடங்களில் தனது பெயரிலும் வீட்டுமனை வாங்கி உள்ளதாக தெரிவித்து தலைவரை தகுதி நீக்கம் செய்யக் கேட்டுக் கொண்டதன் பேரில் செயல் அலுவலரிடம் அறிக்கை கோரப்பட்டது.

இதே புகாரினை மனுதாரர் பேரூராட்சிகள் இயக்குநர் அவர்களுக்கும் 20.04.2015ல் அளித்திருந்தார். செயல் அலுவலரிடமிருந்து 21.04.2015ந் தேதியில் சார்பதிவாளர் அலுவலக ஆவணங்களுடன் (தலைவர் பெயரிலும் தலைவரின் மனைவி பெயரிலும் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களுடன்) அறிக்கை பெறப்பட்டது. பெறப்பட்ட அறிக்கையினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் குறிப்பு கோரி அனுப்பப்பட்டதில் புகார் தொடர்பாக விசாரணை செய்யப்பட்டதா ? விசாரணையில் விதிமீறல் என்ன கண்டறியப்பட்டது என்ற கேள்வி எழுப்பப்பட்டதன் பேரிலும் விதிமுறைப்படி சரியா, தவறா என முடிவு செய்ய அறிவுறுத்தப்பட்டது. அதன்பேரில் 30.06.2015 அன்று விசாரணை தேதி நிர்ணயிக்கப்பட்டதில் மனுதாரர் மட்டும் ஆஜராகி விளக்கம் சமர்ப்பித்திருந்தார். தலைவர் ஆஜராகவில்லை. இந்நிலையில் 21.07.2015 அன்று விசாரணை தேதி நிர்ணயம் செய்யப்பட்டதில் தலைவரால் 15 நாட்கள் அவகாசம் கேட்கப்பட்டும், மனுதாரர் அதே விளக்கத்தினை எடுத்துரைத்தார்.

இதனடிப்படையில் 07.08.2015–ந் தேதி அம்மாபேட்டை பேரூராட்சியில் ஆய்வு மேற்கொண்டு அதனை தொடர்ந்து மேற்படி தலைவர் மற்றும் தலைவர் மனைவி பெயரில் வாங்கப்பட்ட மனைகளுக்கு சார்பதிவாளரிடமிருந்து ஆவணங்கள் பெறப்பட்டதை சென்னை, பேரூராட்சிகள் இயக்குநர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. இதனிடையே மனுதாரரால் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு, 4 மாதங்களுக்குள் மேற்படி வழக்கினை மனுதாரருக்கும், புகார்தாரருக்கும் அறிவிப்பு வழங்கி முடிக்க மாண்புமிகு நீதிமன்றத்தால் தீர்ப்புரை வழங்கப்பட்டிருந்ததது. பின் மீள நீதிமன்ற வழக்கு தொடர்ந்த பின் 01.08.2016ல் பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களால் மனுதாரரை விசாரணை செய்யப்பட்டது. இதனை தொடர்ந்து மேற்படி கோப்பு மாண்புமிகு முறைமன்ற நடுவம் அவர்களுக்கு அனுப்பப்பட்டது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தலைவர் மற்றும் அவரது மனைவி பெயரில் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளில் வாங்கப்பட்ட மனைப்பிரிவுகளுக்கும், தலைவரால் அங்கீகாரமற்ற மனைப்பிரிவுகள் விற்பதை தடை செய்யவும் விதிகளில் தெளிவுரை இல்லாத காரணத்தினால் மேல்நடவடிக்கை தொடர பேரூராட்சிகளின் ஆய்வாளர் என்ற அடிப்படையில் மேற்படி விபரங்கள் சென்னை பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்," என்றும் தெரிவித்துள்ளார்.

6. மேலும், ஈரோடு மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் தல ஆய்வு அறிக்கை ந.க.எண்.4865/2016/ப3, நாள்:23.9.2016ல் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-

" ஈரோடு மாவட்டம், அந்தியூர் வட்டம், அம்மாபேட்டை பேரூராட்சி மன்றத் தலைவராக உள்ள திரு. டி. செந்தில்குமார் என்பவர் அம்மாபேட்டை பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மனுதாரரால் குறிப்பிடப்பட்ட கணபதி நகரில் அமைந்துள்ள மனைப் பிரிவுகள் தொடர்பாக விதிமுறைகளின்படி நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் மற்றும் பேரூராட்சிமன்றத்திடம் மனைப் பிரிவுகளாக பிரித்து விற்பனை செய்ய அங்கீகாரம் பெறப்படவில்லை. மேலும் இவர் தன் பெயரிலும் தனது மனைவி பெயரிலும் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளில் இடம் வாங்கியது சார் பதிவாளர் அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட ஆவணங்களின்படி உறுதியாகிறது.

மனுதாரரால் குறிப்பிடப்பட்ட மனைப் பிரிவுகள் பேரூராட்சி மன்றம் மற்றும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களால் விதிமுறைகளின்படி அங்கீகரிக்கப்படாத மனை இடங்களாகும். இம்மனை பிரிவுகளில் அம்மாப்பேட்டை பேரூராட்சியின் மூலம் எவ்வித அடிப்படை வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. இதனால் பேரூராட்சிக்கு இழப்பு ஏற்பட்டதாக தெரிவிக்கப்படும் கேள்வி எழவில்லை.

மேலும், அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவான அம்மாப்பேட்டை கிராமம் ரீ.ச.எண்.403/3ல் தனது மனைவி திருமதி எஸ். சிவசக்தி என்பவரின் பெயரில் ஆவண எண்.268/2009, நாள்:9.2.2009ல் பதிவு செய்யப்பட்ட 2193 சதுர அடியில் அம்மாப்பேட்டை பேரூராட்சியில் அப்போது பணிபுரிந்த செயல் அலுவலர் திரு. P. கார்த்திகேயன் என்பவரால் வரைபட ஒப்புதல் மற்றும் கட்டிட அனுமதி பெற்று வரி விதிப்புகள் செய்யப்பட்டுள்ளது தல ஆய்வின் பொழுது கண்டறியப்பட்டது.

மனுதாரரால் தெரிவிக்கப்பட்ட புகார்கள் அனைத்திற்கும் உரிய ஆதாரமும், ஆவணமும் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் பேரூராட்சி மன்றத் தலைவர் மீது நடவடிக்கை தொடர விதிகளில் எவ்வித தெளிவுரையும் வழங்கப்படாத காரணத்தினால், செயல்

அலுவலருக்கு அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளில் கட்டிட அனுமதி வழங்கக் கூடாது என நேரில் அறிவுறுத்தப்பட்டுள்ளது என்ற விவரத்தினை தெரிவித்துக்கொள்கிறேன்," என்று தெரிவித்துள்ளார்.

7. மேலும், இம்முறைமன்ற அழைப்பாணை அ.ம.எண்.935/TPT/ 2016/நாள்: 21.10.2016 மற்றும் 30.11.2016 அனுப்பப்பட்டு மேற்படி முறையீட்டு மனு தொடர்பாக தற்போதைய அம்மாபேட்டை பேரூராட்சி செயல் அலுவலரிடம் 01.11.2016 மற்றும் 11.01.2017 ஆகிய நாட்களில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி விசாரணையில் செயல் அலுவலர் கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் அளித்தார்:-

**01.11.2016 அன்று அளிக்கப்பட்ட வாக்குமூலம்:**

"நான் 14.09.2016 முதல் ஈரோடு மாவட்டம் அம்மாபேட்டை பேரூராட்சியினுடைய செயல் அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். மனுதாரர் திரு.ப.அப்புசாமி முறையீடு குறித்து விவரங்கள் பேரூராட்சி அலுவலகத்தில் உள்ள கோப்புகள் மூலம் தெரிந்துகொண்டேன். எனக்கு முன்னால் இருந்த செயல் அலுவலர் திரு.பாலகிருஷ்ணன் 21.4.2015ல் மாவட்ட ஆட்சி தலைவருக்கு அனுப்பிய அறிக்கை, இதேபோன்று உதவி இயக்குநர், பேரூராட்சி இயக்குநருக்கு அனுப்பிய கடித அறிக்கை எனக்கு முந்தைய செயல் அலுவலர் திரு.பாலகிருஷ்ணன், பேரூராட்சி உதவி இயக்குநருக்கு அனுப்பிய அறிக்கை அனைத்தும் அறிவேன்.

அங்கீகரிக்கப்படாத வீட்டுமனைகள் அவரே ஏற்படுத்தி 2 நபர்களுக்கு விற்றுள்ளார். ஆனால் அதற்கு பிறகு யாரும் விலைக்கு வாங்கவில்லை. அந்த அங்கீகரிக்கப்படாத மனைக்கு போடப்பட்டுள்ள சாலை பேரூராட்சி நிதியிலிருந்து செய்யவில்லை. அவரது சொந்த பணத்திலிருந்து செய்துள்ளார். இதுவரைக்கும் சாலை வசதி போன்ற அடிப்படை வசதி எதுவும் செய்யவில்லை. மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள பேரூராட்சி தலைவர் தனது மனைவி பெயரில் அங்கீகரிக்கப்படாத வீட்டு மனையில் வீடு கட்டி, அந்த வீடுகளுக்கு கதவு எண்கள் 131, 132, 133 என தரப்பட்டுள்ளது. பேரூராட்சியால் அந்த இலக்கங்கள் தரப்படவில்லை. 133–1, 133–2, 133–3 என்ற இலக்க எண்கள் மட்டுமே கொடுத்துவிட்டு வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. இந்த அங்கீகரிக்கப்படாத மனைபிரிவில் வரி விதிப்பு செய்தவர் திரு.கார்த்திகேயன், செயல் அலுவலர். அவர் தற்போது தேனி மாவட்டம், மேல சொக்கநாதபுரம் பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிகிறார். பேரூராட்சி தலைவர் அங்கீகரிக்கப்படாத மனைகளை வாங்குவதும் அந்த மனைகளை விற்பதும் சட்டப்பூர்வமாக தடை ஏதுமில்லை. ஆனால் அங்கீகரிக்கப்படாத வீட்டுமனைகளை பேரூராட்சி சார்பாக அவரே அங்கீரிப்பதுதான் தவறு. இது குறித்து உள்ளாட்சி நிதி தணிக்கையிலும் எந்தவித தடையும் குறிப்பிடவில்லை. இந்த பேரூராட்சி தலைவருடைய மனைவி பெயரில் கட்டப்பட்ட சாஸ்தா நகரில் வீட்டிற்கு வரி விதிப்பு செய்தது ஒரே ஒரு இடம் மட்டும்தான். மற்ற இடங்களை பொறுத்தவரையில் இதுவரை அங்கீகரிக்கப்படாத மனைகளாகவே உள்ளது.

வரி விதிப்பு செய்ய மனுக்களும் பெறப்பட்டுள்ளது. ஆனால் வரி விதிப்பு செய்யப்படவில்லை. இந்த இடங்களில் மின் வசதி மின்துறையால் செய்து தரப்பட்டுள்ளது. கணபதி நகரில் ஒரு கட்டிடம் கட்டப்பட்டு அதில் 3 கதவு எண்கள் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் வரி விதிப்பு ஏதும் செய்யப்படவில்லை. அங்கீகரிக்கப்படாத மனைகளில் வீடு கட்டுவது குறித்து பேரூராட்சி இதுவரை சட்டபூர்வ நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. அம்மாப்பேட்டை பேரூராட்சியில் 7 ஆண்டுகளுக்கு முன்பே அங்கீகரிக்கப்படாத மனை பிரிவுகளில் 42 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. அவர்கள் மேற்கூரை வரி போடுமாறு வற்புறுத்தி வருகின்றனர்.

உள்ளாட்சி தேர்தல் அம்மாபேட்டை பேரூராட்சி அலுவலகத்தில் திரு டி.செந்தில் குமார், 3வது வார்டு உறுப்பினர் தேர்தலில் தற்போது நின்றபோது தனது மற்றும் தனது குடும்பச் சொத்து குறித்து அளித்த உறுதிமொழி ஆவண நகலை இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்கின்றேன்."

**11.01.2017 அன்று அளிக்கப்பட்ட வாக்குமூலம்:-**

" 2012–13 ஆண்டு திரு. செந்தில் குமார் தனது மனைவி பெயரில் கட்டிட விட்டிற்கு (அங்கீகாரமற்ற மனையாகும்). அதற்கு சொத்து வரி விதிப்பு செய்தவர் எனக்கு முன்பு பணி புரிந்த கார்த்திகேயன் ஆவார்.

மொத்தம் அங்கீகரிக்கப்படாத 42 மனைகள் உள்ளது. அதில் பேரூராட்சி தலைவரின் மனைவி சம்பந்தப்பட்ட 3 மனைகள் மட்டும் வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது. மற்றவர்களுக்கு வரிவிதிப்பு செய்யவில்லை. கட்டிடம் கட்டுவதற்கு முன்னாள் செயல் அலுவலர் திரு. கார்த்திகேயன் என்பவரால் அனுமதி 12.11.2012 அன்று வழங்கப்பட்டுள்ளது. இது அங்கீகாரம் பெற்ற மனைகளில் கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி கோரி அனுமதி வழங்கும் படிவத்தின் இணைப்பில் உள்ள சொத்து வரி விதிப்பு ஆணையில் அங்கீகாரமற்ற மனை என்ற எந்த வார்த்தையும் பயன்படுத்தப்படவில்லை. தற்பொழுது வரி விதிப்பு செய்த நாளில் இருந்து வரி வசூல் செய்யப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட கோப்பை இத்துடன் சமர்ப்பித்துள்ளேன். மனுதாரர் கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி கோரிய மனுவோடு கட்டிடம் அங்கீகரிக்கப்படாத மனையில் அதற்காக விதிக்கும் எந்த நிபந்தனையும் ஏற்றுகொள்கிறேன் என்ற எந்த கடிதமும் மனுதாரரால் சமர்ப்பிக்கபடவில்லை." என்று தெரிவித்தார்.

8. இம்முறைமன்ற அழைப்பாணை எண்.935/TPT/2016 நாள்:30.11.2016 அனுப்பப்பட்டு மேற்படி முறையீட்டு மனு சம்பந்தமாக அம்மாபேட்டை பேரூராட்சியின் முந்தைய செயல் அலுவலர் திரு. P. கார்த்திகேயன் அவர்களிடமும் 28.12.2016 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி விசாரணையின்போது முந்தைய செயல் அலுவலர் கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் அளித்தார்:-

"நான் தற்பொழுது மேலச்சொக்கநாதபுரம் செயல் அலுவலராக உள்ளேன். இதற்கு முன்பு அம்மாப்பேட்டை பேரூராட்சியில் செயல் அலுவலராக 17.9.2011 முதல் 14.12.2012 முடிய செயல் அலுவலராக பணிபுரிந்தேன். திரு. செந்தில் குமார் என்பவர் அம்மாப்பேட்டை பேரூராட்சி தலைவராக இருந்தார். ஆடிட்டர் ப. அப்புசாமி (மனுதாரர்) என்பவர் நான் பணியில் இருக்கும் பொழுது எனக்கு எந்த மனுவும் அனுப்பவில்லை. உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவத்தில் இருந்து அனுப்பிய அழைப்பு கடிதம் மட்டுமே எனக்கு தெரியும்.

அங்கீகாரம் பெறாத மனைகளை விற்பதற்கு முகவராகவோ, பெறுவதற்கு முகவராகவோ அல்லது விற்பனை செய்வதற்கு முகவராகவோ பேரூராட்சி தலைவர் இருந்த விவரம் ஒன்றும் தெரியாது. என்னுடைய பணிக் காலத்தில் முறைகேடு குறித்து எவ்வித புகாரும் பெறப்படவில்லை" என தெரிவித்தார்.

9. எதிர்மனுதாரரும் பேரூராட்சி மன்றத் தலைவருமான T. செந்தில் குமார் மீதான குற்றச்சாட்டுகள் குறித்து இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையிலும், மனுதாரர், எதிர்மனுதாரர், செயல் அலுவலர்கள் மற்றும் பேரூராட்சி உதவி இயக்குநர் ஆகியோர் விசாரணையின் போது அளித்த வாக்குமூலங்களின் அடிப்படையிலும் கூர்ந்தாய்வு செய்யப்பட்டன. எதிர்மனுதாரர் திரு. T. செந்தில் குமார் 2011-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல் பேரூராட்சி மன்ற தலைவராக பணியாற்றி வந்துள்ளார். இவர் மீதான முதன்மையான குற்றச்சாட்டு

அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவில் தனது மனைவி பெயரில் மனை வாங்கி அம்மனைக்கு பேரூராட்சியின் கட்டிட அனுமதி பெற்றது மற்றும் அவ்வீட்டிற்கு சொத்து வரி விதிப்பு செய்ததாகும். மேலும் அங்கீகரிக்கப்படாத மனை பிரிவு உரிமையாளரிடமிருந்து கையூட்டாக மனைகளை பெற்றுக்கொண்டு அவர்கள் மனைகள் விற்பதற்கு உறுதுணையாக இருந்துள்ளதுடன், அங்கீகரிக்கப்படாத வீட்டு மனைப் பிரிவில் உள்ள மனைகளை பேரூராட்சித் தலைவரே விற்பனை செய்துள்ளார் என்றும் குற்றச்சாட்டு அளிக்கப்பட்டுள்ளது.

10. இந்நேர்வில் பேரூராட்சிமன்றத் தலைவரின் மனைவி திருமதி S.சிவசக்தி 09.02.2009ம் நாளிட்ட ஆவண எண்.268/2009ன் மூலம் அம்மாபேட்டை பேரூராட்சி, ஊமாரெட்டியூர் கிராமம் புல எண். 403/3ல் 2193 சதுர அடி நிலத்தினை ரூ.1,20,000/-க்கு கிரயம் பெற்றுள்ளார். மேற்குறிப்பிட்ட நிலத்தில் 1318.96 சதுர அடி நிலப்பரப்பில் கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி கோரி 09.11.2012 அன்று விண்ணப்பம் அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி கட்டிடத்திற்கு திரு. பி. கார்த்திகேயன் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்கள் நடவடிக்கை க.உ.32/2012-13, நாள் 12.11.2012 மூலம் கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி கட்டிடங்களுக்கு 133/1, 133/2 மற்றும் 133/3 என்று இலக்கமிட்டு 12.11.2012 அன்றே சொத்துவரி விதிப்பும் செய்யப்பட்டுள்ளன. நிலஉடமைதாரர் திருமதி S.சிவசக்தி கட்டிட உரிமம் வழங்கக் கோரி 09.11.2012 அன்று விண்ணப்பம் செய்துள்ளார். மேற்படி விண்ணப்பத்தினை பரிசீலனை செய்த பேரூராட்சி மன்ற செயல்அலுவலர் தனது 12.11.2012 நாளிட்ட நடவடிக்கையில் கட்டிட அனுமதி வழங்கியுள்ளார். மூன்று நாட்களில் கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் கட்டிட அனுமதி வழங்கிய அன்றே சொத்துவரியும் விதிக்கப்பட்டுள்ளது. அதற்கான தொகையும் 19.11.2012 அன்று வசூலிக்கப்பட்டுள்ளது. இந்நேர்வில் செயல் அலுவலர் மேற்படி வீட்டுமனைப்பிரிவிற்கு திட்டஅனுமதி வழங்கப்பட்டுள்ளதா என ஆய்வு செய்யப்படவில்லை என்பது க.உ.32/2012-13 குறித்த கோப்பிலிருந்து அறியமுடிகிறது. மேலும், கட்டிட அனுமதி வழங்கப்பட்ட நாளிலிருந்து பத்து நாட்கள் கழித்து சொத்துவரியும் விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் மத்திய அரசின் நகர்ப்புற வேலைவாய்ப்பு மற்றும் வறுமை ஒழிப்பு அமைச்சகத்திற்கு தாக்கல் செய்யப்படவேண்டிய அட்டவணையில் மேற்படி கட்டிடம் 15.05.2012 கட்ட தொடங்கப்பட்டு 20.10.2012 முடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, திட்டஅனுமதி பெறாத மனையில் கட்டிமுடிக்கப்பட்ட வீட்டிற்கு பின்னாளில் கட்டிட அனுமதி வழங்கி சொத்துவரியையும் விதித்துள்ள செயல் அலுவலரின் இத்தகைய முறையற்ற செயல் சம்பந்தப்பட்ட சட்ட விதிகளுக்கு முரணானதாகும்.

11. அம்மாபேட்டை பேரூராட்சி மன்றத்தலைவரும் எதிர்மனுதாரருமான திரு T. செந்தில்குமார், 2011 அக்டோபர் திங்கள் முதல் 2016 அக்டோபர் திங்கள் முடிய பேரூராட்சி மன்றத் தலைவராகப் பணியாற்றியுள்ளார். இவரது பணிக்காலத்தில் இவரும் இவரது மனைவியும் சில வீட்டுமனைகளை கிரயத்திற்கு வாங்கியுள்ளார்கள். பேரூராட்சி மன்றத்தலைவராகப் பணியாற்றியதுடன் அரிசி வியாபாரத்தினையும் செய்து வந்துள்ளார். 2011-12 நிதியாண்டு முடிவில் எதிர்மனுதாரர் மற்றும் மனைவியின் ரொக்கக் கையிருப்பு ரூ.7,89,287/- என எதிர்மனுதாரர் தாக்கல் செய்த வருமானவரி கணக்குப் படிவத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2012-13 நிதியாண்டு முடிவில் ரூ.7,55,000/- மதிப்பிலான நான்கு சொத்துக்கள் எதிர்மனுதாரர் மற்றும் அவரது மனைவியால் கிரயம் பெறப்பட்டுள்ளது. மேற்படி கிரயம் பெற்ற சொத்துக்களின் மதிப்பு கையிருப்புத் தொகைக்கு மிகாமல் அத்தொகை மதிப்பிற்குள்ளாகவே வாங்கப்பட்டுள்ளதாக வருமானவரி கணக்குப் படிவம் மூலம் அறியமுடிகிறது. 2012-13 நிதியாண்டு முடிவில் எதிர் மனுதாரர் மற்றும் அவரது மனைவியின் மொத்த ரொக்கக் கையிருப்பு ரூ.4,27,339/- என வருமானவரிப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், ரூ. 10,90,000/- மதிப்பிலான சொத்து 25.04.2013 நாளிட்ட ஆவண எண். 1130/2013ன் மூலம் கிரயம் பெறப்பட்டுள்ளது. கையிருப்பில் இருந்த தொகையை விட, வாங்கப்பட்ட சொத்தின் மதிப்பு

ரூ.6,00,000/–க்கு மிகுந்துள்ளது என கண்டறியப்படுகிறது. மேலும், இந்நேர்வில் ஈரோடு மண்டல பேரூராட்சி உதவி இயக்குநரின் 11.08.2015 மற்றும் 23.9.2016 நாளிட்ட அறிக்கை ந.க. எண்.4865/2015/ப3–ல் எதிர்மனுதாரரான பேரூராட்சிமன்றத் தலைவர், புகார்மனுவில் தெரிவித்துள்ள இடங்களை தனது மற்றும் தனது மனைவியின் பெயரில் வாங்கியுள்ளார் என்பதை அம்மாபேட்டை சார்பதிவாளர் கடிதம் மற்றும் அத்துடன் பெறப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் உறுதி செய்துள்ளார். மேற்படி அறிக்கைகள் மற்றும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டதில் எதிர்மனுதாரர் தனது குடும்ப வருமானத்திற்கு மிகையாக சொத்து வாங்கியுள்ளார் என்பது உறுதியாகிறது.

12. அங்கீகரிக்கப்படாத வீட்டுமனைகளுக்கு எந்தவித அடிப்படை வசதியும் பேரூராட்சி நிதியிலிருந்து செய்து தரப்படவில்லை என்பது பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் மேற்படி அறிக்கைகள் மற்றும் செயல் அலுவலரின் வாக்குமூலம் மூலம் உறுதி செய்யப்படுகிறது. மேலும், மனுதாரர் அங்கீகரிக்கப்படாத வீட்டுமனை உரிமையாளர்களிடம் கையூட்டாக வீட்டுமனைகளைப் பெற்று எதிர்மனுதாரர், தனது பெயரிலும் தனது மனைவி பெயரிலும் கிரயம் செய்து, வீட்டுமனைகள் விற்பனை செய்ய அனுமதித்துள்ளார் என்பதற்குரிய ஆதாரங்கள் ஏதும் மனுதாரர் சமர்ப்பிக்கவில்லை. பொதுவாக கையூட்டு பெற்றுள்ளார் என்று மட்டுமே குறிப்பிட்டுள்ளார்.

13. இந்நேர்வில், எதிர்மனுதாரர் அங்கீகரிக்ககப்படாத வீட்டுமனைகளை வாங்கவோ விற்கவோ கூடாது என்று குறிப்பான விதிமுறைகள் ஏதும் வகுக்கப்படவில்லை என்றாலும், பொதுப்பணியாளரான எதிர்மனுதாரர் உள்ளாட்சி அமைப்புக்கு சம்பந்தப்பட்ட சட்டவிதிகளை கடைபிடிக்கவேண்டிய கடமைக்குட்பட்டவர். தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம், 1971, பிரிவுகள், 47 மற்றும் 47–A–ன் படி திட்ட அனுமதி பெறாமல் எந்தவொரு நிலத்தினையோ கட்டிடத்தினையோ மேம்படுத்தக்கூடாது. ஆனால், எதிர்மனுதாரர் உள்ளாட்சி அமைப்பின் பொதுப்பணியாளராக இருக்கும் நிலையில் கூட அத்தகைய சட்டவிதிகளை மீறி அங்கீகாரம் பெறாத மனைப்பிரிவு மனைகளை முகவர் என்ற நிலையில் விற்றுள்ளார். மேலும் அத்தகைய மனைகளை தன்பெயரிலும் தனது மனைவி பெயரிலும் தன் வருமானத்திற்கு மிகையான மதிப்பில் வாங்கியுள்ளார். மேலும், பொதுப்பணியாளரான செயல் அலுவலரையும், தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து தனது மனைவிக்கு பணப்பலன் அடையும் வகையிலும் உள்ளாட்சி அமைப்பிற்கு நிதி இழப்பு ஏற்படும் வகையிலும் விதிமுறைகளுக்கு முரணாக கட்டிட அனுமதி தர வைத்துள்ளார் என்று யூகிக்க முடிகிறது. எதிர்மனுதாரரின் இத்தகைய செயல்பாடுகளை ஊழல் தடுப்புச் சட்டம், 1988–ன் கீழ் குற்றவியல் குற்றமாக கருதி உரிய புலனாய்விற்கு உட்படுத்துமாறு ஈரோடு மாவட்ட குற்றவியல் புலனாய்வுத் துறைக்கு உத்திரவிடப்படுகிறது.

14. இந்நேர்வில், அம்மாப்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலராக இருந்த திரு. பி. கார்த்திகேயன், மேற்கூறிய தமிழ் நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம், 1971-ன் பிரிவுகள் 47 மற்றும் 47-A-ன் படி அனுமதி பெறாத மனைப் பிரிவில் கட்டி முடிக்கப்பட்ட எதிர் மனுதாரரின் மனைவியின் கட்டிடங்களுக்கு விதிமுறைகளை மீறி கட்டிட அனுமதி வழங்கி அன்றே சொத்து வரியும் விதித்து முறையற்ற கட்டிடத்தை முறைப்படுத்தியுள்ளார். இதன்மூலம் உள்ளாட்சி அமைப்பிற்கு மனைப்பிரிவு திட்ட அனுமதி பெறுவதற்குரிய கட்டணம் ஏதும் வசூலிக்கப்படாமல் இழப்பீடு ஏற்படுத்தியுள்ளார். மேலும், மேற்கூறிய பிரிவு 47-A மற்றும் அரசாணை நிலை எண்.289, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, நாள்: 16/12/2010ன் படி அங்கீகாரமற்ற மனைகள் மற்றும் கட்டிடங்கள் அமைப்பதை தடுக்கும் அதிகாரம் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கே வழங்கப்பட்டுள்ள நிலையில்

அத்தகைய அங்கீகாரமற்ற மனைப்பிரிவுகளை தடுப்பதற்கு மேற்கூறிய தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம், 1971, பிரிவுகள் 56 மற்றும் 57–ன் படி நடவடிக்கைகளை எடுக்காமல் அத்தகைய மனைப்பிரிவில் கட்டிய கட்டிடத்திற்கு அனுமதி வழங்கி, சட்டப்படியான கடமையைச் செய்யத் தவறிய செயல் அலுவலர்களின் இத்தகைய செயலை சீர்கேடான நிர்வாகம் என்று கருதி, சம்பந்தப்பட்ட செயல் அலுவலர்கள் மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை எடுக்க பேரூராட்சிகளின் இயக்குநருக்கு பரிந்துரை செய்யப்படுகிறது.

2017– ஆம் ஆண்டு, மார்ச் திங்கள் 24–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

பேரூராட்சிகளின் இயக்குநர்,
குறளகம், சென்னை – 600 108.

ஆய்வாளர்,
குற்றவியல் புலனாய்வுத் துறை,
ஈரோடு – 638 002.

பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
ஈரோடு மண்டலம்,
ஈரோடு மாவட்ட ஆட்சியரகம்,
ஈரோடு.

செயல் அலுவலர்
அம்மாபேட்டை பேரூராட்சி,
அம்மாபேட்டை, ஈரோடு மாவட்டம்.

திரு. ப. அப்புசாமி,
ஊமா ரெட்டியூர்,
ஈரோடு மாவட்டம்–638 311.

திரு. T.செந்தில்குமார்
பேரூராட்சி மன்ற முன்னாள் தலைவர்,
அம்மாப்பேட்டை பேரூராட்சி,
ஈரோடு மாவட்டம்.

முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்